[1978 மார்ச் 20]

முடமானவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கல்.

*636 வினா—திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால் முடமானவர்களுக்கு மூன்று சக்கரவண்டி வழங்கும் திட்டம் தற்பொழுது கைவிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், காரணம் என்ன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: கால் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கும் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 1977–78-ல் 500 முச்சக்கர வண்டிகள் வழங்கப்படுகின்றன. 1978–79ஆம் ஆண்டும் 500 முச்சக்கர வண்டிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவரவர்களே ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் கொடுப்பதில் மாவட்டத்திற்கு இவ்வளவுதான் கொடுக்க வேண்டுமென்ற வரையறை இருக்கிறதா? எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, தேவையின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது.

திரு. செ. மெ. ராஜு: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் கொடுப்பதைப் போல காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவி கொடுக்க அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, குறிப்பாக பள்ளிச் சிறுவர்கள் 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு காது கேட்க முடியாதவர்களுக்கு இந்த அரசாங்கம் ஆண்டு ஒன்றுக்கு 300 காது கேட்கின்ற கருவிகளை இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊனமுற்றவர்கள் சென்னை நகர வீதிகளில் கேட்பாரற்ற முறையிலே நடைபாதைகளிலும் மற்றைய பகுதிகளிலும் திரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களைப் பிடிப்பதற்கு சென்னை மாநகராட்சி சுகாதார சட்ட விதிகளில் இடமில்லை. காவல் துறையினராவது அவர்களைப் பிடித்து பராமரிப்பு இல்லங்களில் சேர்ப்பதற்கு வகை செய்யப்படுமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே நான் ஏற்கனவே மானியக் கோரிக்கையின் போது இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். தகுந்த முறையிலே பரிசீலித்து, கூடிய விரைவிலே முடிவெடுக்க இருக்கிறோம்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, கால் முடம் ஆன வர்கள் எவ்வளவு பேர்கள் மனுக்களைத் தந்திருக்கிறார்கள்? அவர் களுக்கு, குறிப்பாக அரசாங்க உத்தியோகங்களில் முன்னுரிமை தர ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ரா. க.சு. தண்டபாணி: தலைவரவர்களே, இது போன்ற கருவிகள் கிராமப்புறங்களிலே இதற்கு முன்னால் நடந்த ஆட்சி யிலே சரியாகக் கொடுக்கப்பெறவில்லை. இதில், மற்றொன்று; சட்டமன்ற உறுப்பினர்கள் போன்ற பிரதிநிதிகள்தான் அதிகாரி களை விட, எவ்வளவு முடம் ஆனவர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு முச்சக்கர வண்டிகள் தேவைப்படும் என்ற விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாக, சட்டமன்ற உறுப் னர்கள் மூலமாக அல்லது மக்கள் பிரதிநிதிகள் மூலமாக, எவ் வளவு வண்டிகள் தேவைப்படும் என்று கணக்கெடுத்து, உதவி அளிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: தலைவரவர்களே, ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, யார், யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் பரிசீலித்து முடிவெடுக்கிறார்கள். தனிப்பட்டமுறையில் ஏதாவது அப்படி இருக்குமானால் தகவல் கொடுப்பார்களானால் அதுபற்றி அரசு முடிவெடுக்கும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆளுங்கட்சி உறுப் பினர் கேள்வி கேட்கும்போது முன்பிருந்த ஆட்சியில் இத் திட்டங் கள் நல்ல முறையில் செயலாக்கப்படவில்லை யென்று சொன்னார். உடல் ஊனமுற்றவர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்குகின்ற திட்டமும், அதேபோல், பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு, காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவிகளைக் கொடுக்கின்ற திட்டமும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தொடங் கப்பட்டது. இப்பொழுது அமைச்சரவர்கள், முன்பிருந்த ஆட்சி யில் இது தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரையில் இந்த காது கேட்கும் கருவிகளும் முச்சக்கர வண்டிகளும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டன என்ற விவரத்தை அளிப்பார்களா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் தகவல் சேகரித்துச் சொல்கிறேன்.